<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**</u>
<u>**அசல் வழக்கு எண். 244/2022**</u>
<u>**நாள் 08/06/2026 திங்கட்கிழமை**</u>

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – அனிதா (DW1) | க/பெயர் – செல்வம் |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**</u>

3. நான் 5 மாதங்கள் வரை வாதிக்கு வட்டி பணம் செலுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றும் அதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.சா ஆ 1 ஆவணம் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வழக்கிற்கு பின்னிட்ட நாளில் மேற்படி ஆவணம் தவறாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வாதியிடம் பணம் வாங்கிக்கொண்டு அதை திருப்பி செலுத்தாமல் பணத்தை திருப்பி செலுத்திவிட்டேன் என்றும் வாதி அதற்கு எந்த ரசீதும் வழங்கவில்லை என வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. என் பிரமாண வாக்குமூலத்தில் பணம் திருப்பி செலுத்த இயலாததற்கான சொல்லப்பட்டிருக்கும் காரணம் என்னுடைய பதிலுரையிலோ, பதில் அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல, தொகை அதிகமாக உள்ளது என சொல்லியுள்ளேன். வாதி அதிகபடியான தொகை திருப்பி கேட்பதாக என்னுடைய பதில் அறிவிப்பிலோ அல்லது பதிலுரையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல.

நான் வாதியிடம் பணம் பெற்றுக்கொண்டு அதற்கு ஈடாக சொத்தை அடமானம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் வாதிக்கு பணத்தை திருப்பி கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றும் பணத்தை திரும்ப செலுத்தாமல் தட்டிக்கழிப்பதற்காக எதிர் வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியபடி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**